**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண். 93/2025**

முருகவேல், த/பெ.வீரபத்திரபிள்ளை, வயது சுமார் 57,வசிப்பிடம்– கீழதாளியாம்பட்டி தெற்கு, வைகைநல்லூர் தெற்கு, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம். ... வாதி

**/எதிராக/**

சரவணன், த/பெ.ராமலிங்கம், வயது சுமார் 40, வசிப்பிடம்–கீழதாளியாம்பட்டி தெற்கு, வைகைநல்லூர் தெற்கு, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.
.... பிரதிவாதி

இவ்வழக்கானது தாவா இடத்தில் வீடுகட்டி குடியிருந்து விவசாயம் செய்து சென்று வரும் பாதையை வாதி அனுபவம் செய்து வருவதை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்த தேதி – 02.06.2025

வழக்குமூலம் 22.05.2025 இடம்–வைகைநல்லூர் தெற்கு, குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் என்ற இடத்தில் எழுந்துள்ளது.

தாவாவிற்கான நீதிமன்ற ஆள்வரைக்குமான பொருமானம் – ரூ,1000/–

**தாவாவிற்கான மதிப்பு**

தாவா நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மதிப்பு
நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் - ரூ.1000/-
வாதியின் உத்தேச மதிப்பு 27 C
வாதி செலுத்திய நீதிமன்ற கட்டணம் - ரூ.30/-

இவ்வழக்கு என் முன்பாக 24.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.முருகன்

அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்பாணை**

இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**சொத்து விபரம்**

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், வைகைநல்லூர் தெற்கு கிராமம், நத்தம் பட்டா எண்.2326 க்கு சர்வே எண்.555/6 ல் ஹெக்.0.40.0 நிலத்திலுள்ள வீடு மற்றும் தோட்டத்திற்கு நான்கெல்லை விபரம். தென்வடல் தார் ரோட்டிற்கு கிழக்கு, வீரமணி நிலத்திற்கு மேற்கு, ஆறுமுகம் நிலத்திற்கு வடக்கு, பொன்னுசாமி நிலத்திற்கு தெற்கு, இதில் மேற்படி வீட்டிற்கு சென்று வரும் பாதை, வண்டி பாதை பாத்தியம்தான் தாவா சொத்துக்கு சம்பந்தம்.

| வ.எண் | செலவுத் தொகை விபரம் | வாதி | பிரதிவாதி |
|---|---|---|---|
| 1 | நீதிமன்றக் கட்டணம் | - | – |
| 2 | வழக்குரை தயாரிக்க | - | – |
| 3 | வக்காலத்து | - | – |
| 4 | கட்டளை சேர்ப்பிக்க ஸ்டாம்பு | - | – |
| 5 | வழக்கறிஞர் கட்டணம் | - | – |
| | **மொத்தம்** | – | – |

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கப்பட்டது.

Sd/–R.தமிழரசி

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**குளித்தலை.**

********************
**PDM, Kulithalai**
**O.S.No.93/2025**
**DECREE**
**D.D. 26.03.2026**
*******************